செ.வெ.எண்-16 நாள்-08.12.2020

# அரியலூர் மாவட்டம்
# புரேவி புயல் காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு அரசின் நிவாரண உதவிகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் புரேவி புயல் காரணமாக ஏற்பட்ட மழையின் மூலம் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு அரசின் நிவாரண உதவிகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (08.12.2020) வழங்கினார்கள்.

அதன்படி, ரெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி, கீழப்பழூர் ஊராட்சி மன்ற அலுவலகம், கோவில் எசனை அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் ஏலாக்குறிச்சி மேல்நிலைபள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசின் நிவாரணமாக 10 கிலோ அரிசி, வேட்டி, சேலை மற்றும் குடிசை வீடுகளுக்கு தலா ரூ.4100/- வீதமும் , ஓட்டுவீடுகளுக்கு ரூ.5200/- வீதமும் அரசின் நிவாரண உதவியாக வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில் அரசின் நிவாரண உதவிகளை வழங்கிய மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள், மழையின் மூலம் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர்களுக்கு ஆறுதல் தெரிவித்தர்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டத்தில் மழையினால் பாதிக்காத வண்ணம் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன்படி, மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் பாதுகாப்பற்ற இடங்களில் வசித்த பொதுமக்களின் வசதிக்காக நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன. இம்முகாம்கள் மூலமாக இங்கு தங்க வைக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், மழையின் காரணமாக விவசாயப்பணிகள் பாதிக்காத வகையில் வயல்களில் மழைநீர் தேங்காத வண்ணம் வடிகால்கள் சீரமைக்கப்பட்டு, மழைநீர் வயல் வெளியிலிருந்து போர்கால அடிப்படையில் வெளியேற்றப்பட்டது. மேலும், மழைக்காலங்களில் நீர்நிலைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, நீர் வரத்து மற்றும் உபரிநீர் வெளியேற்றம் குறித்து தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரியலூர் மாவட்டத்தில் மழையின் காரணமாக பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்படாத வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சிறப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அரியலூர் வட்டத்தில் மழையின் காரணமாக சேதமடைந்த 144 குடிசை வீடுகளுக்கு தலா ரூ.4100/- வீதம் ரூ.5 இலட்சத்து 90 ஆயிரத்து 400-ம், 49 ஓட்டுவீடுகளுக்கு ரூ.5200/- வீதம் ரூ.2 இலட்சத்து 54 ஆயிரத்து 800-ம் என மொத்தம் ரூ.8 இலட்சத்து 45 ஆயிரத்து 200 சம்மந்தப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

மேலும், மழைக்காலங்களில் பரவும் தொற்று நோயிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் குடிநீரை நன்கு கொதிக்க வைத்து பருகவும், தங்களது சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்து, மழைக்கால தொற்று நோய்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி (அரியலூர்), சுமதி (திருமானூர்), கோட்டாட்சியர் ஜோதி, வட்டாட்சியர் சந்திரசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர்களுடன் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**